தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-9-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் சாண எரிவாயுத் தொழில்நுட்ப பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உயிர் சக்தி துறையும் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும் இணைந்து “சாண எரிவாயு தொழில்நுட்பம் நிலையான எரிபொருள் மற்றும் கரிம உரம்” எனும் தலைப்பில் 17-9-2018 அன்று பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. நான்கு நாட்கள் நடைபெறும் இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இணைப்புக் கல்லூரிகளிலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர்சக்தி துறைத் தலைவர் மற்றும் இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சு. புகழேந்தி அவர்கள் வழங்கிய வரவேற்புரையில் எரிபொருளின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். மேலும் எரிபொருள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் தன்னிறைவு அடைய தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை விளக்கினார். அவ்வகையில் சாண எரிவாயுத் தொழில்நுட்பத்தின் சிறப்புகள் மற்றும் விவசாயப் பெருமக்களிடம் இத்திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த இப்பயிற்சியின் அவசியத்தினைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர். என். வரதராஜு அவர்கள் விவசாயக் கழிவுகளை மறுசுழற்சி செய்து ஆற்றலை உற்பத்தி செய்வது குறித்து விளக்கங்களை விவசாயிகளிடையே கொண்டு சேர்ப்பது குறித்து பேசினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வித் துறையின் இயக்குநர் முனைவர். எச். ஃபிலிப் அவர்கள் வழங்கிய சிறப்புரையில் விவசாயிகளிடையே இப்பயிற்சியின் தாக்கம் குறித்து விளக்கினார்.

இறுதியாக, உயிர்சக்தி துறை உதவி பேராசிரியர் முனைவர். ரா. மகேந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்